கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் ஜீலை மாதம் 15ம் தேதி செவ்வாய்க்கிழமை
இடைநிலை மனு எண்.420/2022
இன்
அசல் வழக்கு எண்.243/2008

1. சிங்கராஜ்
2. கௌதம் ... மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள்

/எதிர்/

1. போஸ் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி

2. ராமாத்தாள்
3. கண்ணம்மாள்
4. முத்தம்மாள்
5. சின்னத்தாயி
6. பால்பாண்டி
7. பாப்பா
8. துரைப்பாண்டி
9. ராமர்
10. ஜெயமணி
11. யசோதை ... 2 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்/
2 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 08.07.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு

வழக்கறிஞர் திரு.R.G.சங்கர்கணேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S.ஸ்ரீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கினை நிராகரிக்க வேண்டி மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகளால் கட்டளை 7 விதி 11ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு சங்கதிகளை ஆட்சேபணை செய்தும், மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

மனுதாரரின் மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

3.1) அசல் வழக்கானது 29.04.2008ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 15.09.2008ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டு, 06.02.2008ம் தேதி

வழக்கு சாட்சி விசாரணைக்காக பட்டியல் இடப்பட்டுள்ளது. பின்னிட்டு, பல்வேறு இடைநிலை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கானது 15.07.2025 வரை நிலுவையில் இருந்து வருகிறது. அசல் வழக்கானது மேற்படி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு சொத்தை வாதிக்கு விற்பனைகிரைய ஆவணம் மூலம் பிரதிவாதி, வாதிக்கு எழுதி தர வேண்டும் என்று பிரதான பரிகாரமாகவும், மாற்று பரிகாரமாக வாதி பிரதிவாதிக்கு கொடுத்த முன் பணம் ரூ.19,000/- வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டும் என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) இம்மனு நிலுவையில் இருந்த போது, கூடுதல் வழக்குரை சேர்க்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் IA 2/2025 மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. விற்பனை கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில், வழக்கு சொத்தின் அனுபவமானது வாதி வசம் ஒப்படைக்கப்பட்டதாக கூறி இருக்கும் நிலையில், மேற்படி ஒப்பந்தமானது சொத்து உரிமை மாற்று சட்டம் பிரிவு 53Aன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். அவர் பதிவு செய்யப்படாததால் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும், வழக்கானது குறித்தவகை பரிகாரச்சட்டம் பிரிவு 12ன் கீழும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே, எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) மனுதாரர் மனுவில் கூறியுள்ளவாறு, அசல் வழக்கில் வாதி கோரிய பரிகாரமானது சொத்து உரிமை மாற்று சட்டம் பிரிவு 53Aன் கீழோ, பிரிவு 12ன் கீழோ பாதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் கூறும் வாதமானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக காணப்படவில்லை. வழக்கானது சொத்து உரிமை மாற்று சட்டம் பிரிவு 53A மற்றும் பிரிவு 12ன் நிபந்தனைகளுக்கு உட்பட்டே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

3.4) எதிர்மனுதாரர்/வாதிக்கு வழக்குச்சொத்தை பொறுத்து அவர் கோரியுள்ள பரிகாரம் எதிர்மனுதாரர்/வாதிக்கு கிடைக்கக்கூடியதா? என்பதை வழக்கின் முழு விசாரணைக்கு பின்பே தீர்மானிக்க இயலும். மேலும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள சங்கதிகளின் அடிப்படையில் அசல் வழக்கானது கட்டளை 7 விதி 11ன் கீழ் கூறப்பட்டுள்ளதன்படி அசல் வழக்கு நிராகரிக்கப்பட வேண்டிய காரணங்கள் உள்ளதாக மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு ஜுலை மாதம் 15ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.15 14:43:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.15 14:43:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.